வள்ளுவர் ஆண்டு 2008
கார்த்திகை 1
துல்ஹஜ் 4
புதன் (16-11-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 46
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35

# சுதந்திரன்

SUTANTIRAN



# “ஈழத் தமிழர் பிரச்சினையை உலகறியச் செய்வேன்!”

## — செல்வி ஜெனி லிட்டில் சபதம்

ஈழத் தமிழ் அகதிகளின் புனர்வாழ்வு நிதிக்காக 5-11-77ல் லண்டன் திராவிட டிரஸ்ட் (Diravida Trust) டினரால் கிராய்டனில் உள்ள (Lonfranc High School Hall) லான்பிரான்க் உயர் கல்லூரி மண்டபத்தில் “தமிழ்மாலை” (Tamil Evening) எனும் தலைப்பில் கதம்பவிழா வொன்று நடைபெற்றது. இதன் பிரதம விருந்தினராக தொழிற்கட்சியின் சர்வதேச செயலாளர் செல்வி ஜெனி லிட்டில் கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளின் பின்னர் உரை நிகழ்திய செல்வி ஜெனிலிட்டில் “ஈழத்தமிழர்கள் தமது உரிமைக்காகவோ, அல்லது நாட்டுக்காகவோ உடனடியாகப் போராடவில்லை. சிங்கள ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோல் ஆட்சியில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். எனவே இந்த தமிழ் மக்கள் இப்பொழுது நடத்துவது உயிர்ப்போராட்டமே.”

“நான் தொழிற்கட்சியின் சர்வதேச செயலாளர் என்ற காரணத்தால் உலகில் இருக்கும் எல்லா நாடுகளிருக்கும் • விஜயம் செய்யும்போது இலங்கையில் நடைபெறும் மனித உரிமைகளை மீறிய செயல்களை உலகறியச் செய்வேன்.”

“உலக நாடுகள் ரொடீசியா தென்ஆபிரிக்கா நாடுகளில் நடைபெறும் இனவெறியை கண்டிக்கின்றன. ஏன் இலங்கையை கண்டிக்கத் தவறுகின்றனர்? என்று குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் தொழிற்கட்சியைச் சேர்ந்த பல தொழிற்சங்கவாதிகளும், அரசியல் வாதிகளும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளுக்கு திரு. எஸ். சுப்பிரமணியம் தலைமை தாங்கினார்.

## தமிழ் ஈழத்தில் பூர்வீக குடிகள் சிங்களவராம்

‘பரதுவ பேமரதன’ என்ற சிங்கள நூல் ஆசிரியர் அவர் எழுதிய ‘மென்ன யாபனய’ என்ற சிங்கள நூலில் ஈழத்தமிழர்கள் வந்தேறு குடிகள் என்று எழுதியுள்ளார்.

வேட்டைக்கரார்கள் தென் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேறத் தொடங்கினர். தென் இந்தியாவின் திராவிட மன்னர்களின் ஆதிக்கத்தின் பிரதி பலன் தான் இலங்கை முழுவதும் தமிழர்களின் வசிப்பிட மாகியது. இதற்குமுன்னர் யாழ்ப்பாணப் பகுதி முழுவதும் ஆதி தொட்டு வசித்தவர்கள் சிங்களவர். இவர்களில் பலர் அவ்விடங்களை விட்டு வேறு இடங்களைப் பார்த்துப் புறப்பட்டுப் போனதின் பின் எஞ்சியிருந்த சிங்களவர்களும் படிப்படியாக திராவிடரானார்கள்,

இன்று யாழ்ப்பாணத்தின் இனம், மொழி, சமயம், பண்பாடு எல்லாம் பெரும்பாலும் தென் இந்தியாவைப் போன்றது என்று கூறமுடியும் என்று அவர் மேலும் அந் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

# தகமைக்கு முதலிடம் எனும் பிரதமர் தனது வாக்கை காப்பாற்றுவாரா?

ஐ. நா. உறுப்பு நாடாகிய இலங்கை மனித அடிப்படை ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொண்டதுடன் அங்கீகரிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளது.

ஆயின், கடந்த வருடம் சுகாதார சேவைகள் அதிபர் பதவிக்கு நியமனம் நடந்த போது அப்பதவிக்கு வரவேண்டிய திறமையும், தகுதியும், பதவி மூப்பும் கொண்ட டாக்டர் ஜேசுதாசன் புறக்கணிக்கப்பட்டார், அவரிலும் அனுபவமும், திறமையும் குறைந்தவரான டாக்டர் குணவர்த்தனவே நியமனத்தைத் தட்டிக் கொண்டார். டாக்டர் ஜேசுதாசன் ஒன்றுக்கு மேற்படப் பலதடவைகள் சுகாதார சேவைகள் பதில் அதிபராகக் கடமை புரிந்தவர். ஆயினும் டாக்டர் ஜேசுதாசன் தமிழர், டாக்டர் குணவர்த்தனவோ சிங்களவர் இன, மத அடிப்படையில் அரசாங்க உயர் பதவிகள் வழங்குவதில் இலங்கையில் பாரபட்சம் காட்டப்படுவதில்லை என்று கூறியவர் யார்? இப்போது டாக்டர் ஜேசுதாசனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு முழுமையாக அகவை ஒன்று பூர்த்தியாவதால் மனித உரிமைகள் தின அனுசரிப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மேற்படி அநீதியை நினைவு கூருகிறோம்.

1947ல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின் அரசின் இனவொதுக்கல் கொள்கையால் இவ்விதம் பாதிக்கப்பட்ட முதல் தமிழர் காலம் சென்ற நீதியரசர் திரு. சி. நாகலிங்கம் அவர்களே! முன்னாள் வர்த்தக அமைச்சர் திரு. சி. சுந்தரலிங்கம் அவர்களின் சகோதரரான திரு. சி. நாகலிங்கம் அவர்கள் அப்போது பிரதம நீதியரசராக இருந்த திரு. அலன்றோசுக்குப் பதிலாகப் பலதடவைகள் பதில் பிரதம நீதியரசராகக் கடமை புரிந்திருக்கிறார் என்பதோடு. மகா தேசாதிபதியான சோல்பரிப் பிரபுவும். பிரதம நீதியரசரான திரு. அலன்றோசும் ஏக காலத்தில் நாட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் எல்லாம் பதில் மகாதேசாதிபதியாகவும் கடமையாற்றியதன் மூலம் இராணி மாளிகையில் அரசோச்சிய முதல் இலங்கையராகவும் வரலாற்றில் இடம் பெற்றவர் திரு. சி. நாகலிங்கம் ஆவர். இருந்தும் அப்போதைய பிரதம நீதியரசர் அலன்றோஸ் இளைப்பாறியதும், அப்பதவிக்கு முதல் நியமனம் பெற்ற இலங்கையர் என்றபெருமை ஒரு தமிழருக்குப் போகாது தடுப்பதற்காக அவரிலும் பதவியில் இளையவரான அப்போதைய சட்டமா அதிபர் பசநாயக்காவுக்கே அந் நியமனம் வழங்கப்பட்டது. தமிழர் என்ற காரணத்தால் காலஞ்சென்ற நீதியரசர் திரு. சி. நாகலிங்கம், டாக்டர் ஜேசுதாசன் ஆகியோருக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர மாட்டாது என்பதற்கு உத்தரவாதம் அளிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அரசாங்கத்துக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

தற்போதைய ஐ.ஜீ.பீ.யின் பதவிக்காலம் முடிவடையும் தறுவாயிலேயே அது பதவிக்கு வந்தது. அப்பதவிக்கு வருவதற்கு அவரை அடுத்து இருந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இருவருமே தமிழர்கள் மூன்றும் நபராகவே ஒரு சிங்களவர் டி.ஐ.ஜீ.பீ ஆக உள்ளார். பிரச்சினையில் இருந்து நழுவுவதற்காகவே தற்போதய ஐ. ஜீ. பி.க்கு ஓராண்டு பதவி வழங்கப்பட்டதோ என்று தமிழ் மக்கள் மனம் குமுறுகிறது. அப்படியல்ல என்பதை ஜே. ஆர். அரசு 1978ல் ஆவது உறுதிப் படுத்துமா?

மனித உரிமைகள் சாசனத்தைப் பிரகடனம் செய்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் முதல் உரையை நிகழ்த்திய இலங்கையர் என்ற பெருமையை உடையவரான ஜே. ஆர். இலங்கையில் தமிழ் மக்களுக்கு மனித உரிமைகள் அளிக்க முன்வருவாரா?

—உரும்பிராய் ஆனந்தன்

# தமிழ்வாணன் மறைவு

எழுத்துலகிலும் பத்திரிகையுலகிலும் தனக்கெனத் தனிமுத்திரையைக்கொண்டு ஜொலித்துக் கொண்டிருந்த ‘கல் கண்டு’ ஆசிரியர் திரு. தமிழ்வாணன் அவர்களின் திடீர்மறைவு எதிர்பாராமல் ஏற்பட்ட ஓர் பேரிடியாகும். துணிவே துணை என்று தன் நம்பிக்கையுடன் தனக்கென ஓர் பாதையைவகுத்து அப்பாதையில் “போற்றுவார் போற்றட்டும்— தூற்றுவார் தூற்றட்டும்” என்று தன் பத்திரிகை எழுத்துலகப் பயணத்தைதொடர்ந்து கொண்டிருந்தவர் திரு. தமிழ்வாணன். 30 ஆண்டுகாலமாக குமுதம் ஸ்தாபனத்தார் வெளியிட்டுவரும் ‘கல்கண்டு’ பத்திரிகையில் தொடர்ந்து ஆசிரியராகப் பணியாற்றிய போதிலும் —பத்திரிகைக்காரனின் உரிமையை நிலைநாட்டியவர் தமிழ்வாணன். கேள்வி—பதில் பகுதி மூலம் தமிழ் வாசகர்கள் மத்தியில் பெரும்செல்வாக்கைப் பெற்றிருந்த தமிழ்வாணன், சகல துறைகளிலும் தனது கவனத்தைச் செலுத்தத் தவறாதவர். தமது எழுத்தின் சக்தியை நிலைநாட்டிய திரு. தமிழ்வாணன், 500க்குமேற்பட்ட பலவேறு துறை நூல்களைப்படைத்தவர்.

51 வயதில் அவர் பணி முடிந்தது தமிழ் பத்திரிகையுலகுக்கு ஈடு செய்ய முடியாத ஒரு பெரு நஷ்டமே. தமிழ்வாணன் பிரிவால் துயருறும் ‘அனைவர்க்கும் சுதந்திரன் மூலம் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

-ஆர்

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய கதிர்காமத்தின் நிலை!

கதிர்காமம் இராமகிருஷ்ணர் மடத்தை வெகுவிரைவில் மிஷனிடம் ஒப்படைப்போம் என்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்போவதாகவும் பதவிக்குவந்த புதிதில் மக்களிடம் கைதட்டல் வாங்குவதற்காக நீதிமந்திரி தேவநாயகம் வாயில்வந்ததைக் கூறிவிட்டு இதுவரை மௌனம் சாதித்துக்கொண்டிருக்கின்றார். அதைத் திருப்பி ஒப்படைப்பதற்கான சட்ட ஆராய்ச்சி இன்னும் முடிந்தபாடில்லைபோலும். ஆனால் இந்துக்களின் புராதன தலமாகிய கதிர்காமம் கையேற்கக்கூடாதவாகள் கையேற்றுவிட்ட காரணத்தால் இந்துக்கள் அவமதிக்கப்படக்கூடிய விதத்தில் நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்படுகின்றன. நீதி அமைச்சரின் சட்ட ஆராய்ச்சி முடிவதற்குள் கதிர்காமத்தில் சைவமே இல்லாதொழிந்துவிடும் என அஞ்சவேண்டியுள்ளது. இதோ கதிர்காமம் சென்றுவந்த அன்பர் ஒருவர் தமது அனுபவங்களை எழுதுகிறார்.

—ஆர்.

கடந்த சில நாட்களுக்கு முன் எனக்கு கதிர்காம கந்தனிடம்போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்கு போய் கந்தனின் அருள் பெற்று வரலாம் என எண்ணிச் சென்றோம், போன உடனே எங்காவது தங்குவதற்கு இடம் பார்த்தோம். நான் ஏழு வருடங்களுக்கு முதல் போய் இருந்தபடியால் அந்த ஞாபகம் இருக்கும் என்று யோசித்தேன். ஆனால் அங்கே முன்புபோன இடம்போல் தெரியவில்லை. வீதிக்கரையில் வை. எம். பி. ஏ. என்றும் யாத்திரிகர் தங்கும் இடம் என்றும் ஆங்கிலத்தில் எழுதி இருந்தது. உடனே அங்கு சென்றோம்.

இரு அறை எடுத்து தங்கினோம். அன்று நாங்கள் கொண்டு சென்ற உணவையே உண்டோம்: பின் குளித்துவிட்டு எங்கள் கலியுகக் கந்தனின் ஆலயப் பக்கம் சென்று அன்று மாலைப் பூசையாவற்றையும் பார்த்து முடித்துவிட்டு இரவு 8 மணி அளவில் அறைக்குவந்தோம். அந்தக் கந்தனின், பௌத்த இந்து அடியார்கள் தங்கும் யாத்திரிகர் மடத்திலேயே சாப்பாட்டுக்கு ஆயத்தமானோம். வேறு உணவு இல்லாததால் சோறு சாப்பிடவேண்டிய நிலை ஏற்பட்டது. கோப்பைகளில் சோறும் கறியும் குவிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டது, அதில் இருந்த கறிகளைப் பார்த்ததும் எங்களுக்கு விளங்கிவிட்டது. என்ன கறி என்றுகேட்டோம். "கறவல" என்றார். கறவல என்றால் கருவாடு, சிறிது நேரம் ஆளை ஆள் பார்த்தோம் பின் மனதை தேற்றிக்கொண்டு காலையில் குளித்துவிட்டு போவோம் எங்களுக்கு பாவம் கிடைக்காது. இதை நடத்துபவர்களுக்குத் தான் பாவம் கிடைக்கும் என்று மனதைத் தேற்றினோம். எங்களில் ஒருவர் சொன்னார் கந்தனைக் கும்பிட்டுவிட்டோம் காலையே ஊரான பதுளைக்குப் போவோம் என்றார். ஒருவாறு மனதை தேற்றிக்கொண்டு இருந்த பசிக்கு மூக்கைப் பிடித்தபடி போட்டுத்தள்ளினோம். எங்களுடன் பெண்கள் வந்திருப்பார்கள் என்றால் அவற்றிற்குப் பணம் கட்டிவிட்டு எல்லோரையும் பட்டினிபோட்டிருப்பார்கள். இந்நிலை எங்கள் கந்தனின் அடியார்களுக்கு வந்துவிட்டது. இவற்றிற்கெல்லாம் கந்தன் எப்படிப் பொறுப்பான் இவற்றிற்கு ஒருமுடிவு கட்டுவான்.

அப்படி இருக்க சில தேரோக்களின் விஷக்கக்கல்கள் எல்லோருக்கும் தெரிந்து இருக்கும் என நினைக்கிறேன். அதாவது தங்களின் சிறீலங்கா பௌத்தநாடுஎனவே எந்த மூலைமுடுக்கெல்லாம் பௌத்த மயமாக இருக்க வேண்டுமாம் அதாவது பௌத்தமயம் என்னும் பொழுது சிங்களமயமாக இருக்கவேண்டுமாம்,

தமிழர்களின் யாழ்ப்பாணம் எல்லாம் பௌத்தமதப்படி சிங்களம்படித்து சிங்களத்தில் வேலைபார்த்து சிங்கள மக்களைக் குடியேற்றி எல்லாம் பௌத்தமயம் ஆக்காவிட்டால் பௌத்த மதப்படி பாவமாம் எனவே நாடு பாவம் செய்த நாடாகிவிடுமாம். அப்படிப்பட்ட பௌத்த மதத்தின் கொள்கைகளில் உயிர்வதை, புலால் உண்ணல் என்பன முக்கிய கொள்கைகளாகும். அதாவது இந்துமதம் மாதிரி. அந்த சமயக் கொள்கைகளை தங்கள் வை. எம். பி. ஏ. பௌத்த சங்கம் நடாத்தும் யாத்திரிகர் மடத்தில் நடைமுறைப்படுத்தவில்லை. அப்படி இருக்க இந்த நாடு அங்கே வடபகுதி பௌத்த மக்களே இல்லாமல் இருப்பது பாவம் என்று சொல்வதற்கு வெட்கம் இல்லையா? அல்லது மற்றவர்களை ஏய்ப்பதற்கு ஒரு நாடகமா? எனவே இவற்றிற்கு எமது பிரதமர் தங்கள் மதத்தில் உள்ள குறைபாடுகளை இவர்களுக்கு எடுத்துக்கூறி தகுந்த நடவடிக்கை எடுத்தபின் இந்த விஷ மொட்டைகள் சிறீலங்காவை முழுப் பௌத்த நாடாக்க எத்தனிக்கட்டும் — அது நடவாதது ஒன்று.

அது ஒருபுறம் இருக்க அதே சொல் அதாவது சிறீலங்கா முழுப்பகுதியையும் பௌத்த மொழி - சிங்கள மொழி மயமாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் மதத்திற்கு பாவம் என்பவர்கள். எங்கள் கலியுகக் கந்தனை ஏதாவது நாங்கள் தொன்றுதொட்டுவந்த முறைகள் தேவாரம், திருவாசகம் என்ற முறைப்படி எத்தனையோ முறைகளால் வழிபாடு செய்து வழிவந்த எங்கள் கந்தனை றேட்டில் கிடக்கும் அன்னுசிக்கீறு, அழுகிய விளாம்பழம், துப்பரவு இல்லாத பப்பாளிப்பழக்கீறு என்பவற்றுடன் கழுவுவதும் இல்லை. ஏந்திச்சென்று மௌனமாக கையை ஆட்டிவிட்டு எடுத்துக்கொடுத்து ஏதோ நாடகம்போல் நடத்துகிறார்கள். இது ஒரு வழிபாடா? அல்லது எங்கள் மதத்தை எங்கள் கந்தனை இந்த சிங்களவர்கள் திட்டம்போட்டு இழிவுபடுத்துகிறார்களா என்று விளங்கவில்லை.

அப்படி இருக்க எங்கள் ஆதியும் அந்தமும் இல்லாத இந்துமதத்திற்கு எவ்வளவு பாவம்-எவ்வளவு கொடுமை என்று இந்த விஷமிகளுக்குப் புரியவில்லையா? மக்கள் சிங்களமயமாக இயங்கவில்லை. பௌத்த மதத்திற்குப் பாவம் என்றால் ஒரு மதத்தையே அதன் தொன்றுதொட்டுவந்த முறைப்படி நடத்தாமல் ஒரு இழிவுபடுத்தும் முறையில் நடத்துவது எவ்வளவு பாவம். அவர்களிடம் அதாவது இந்த சிங்களவர்களிடம் சொன்னால். அது உங்கள் கடவுள் இல்லை அது எங்கள் கடவுள் அதுதான் எங்கள் முறைப்படி செய்கிறோம் என்கிறார்கள். சரிஅந்த ஆண்டவனின் பெயர் என்ன? என்றால் கதறகம தெவியோ என்கிறார்கள். அப்போ இந்தியாவில் இருக்கும் பல கந்தன் ஆலயங்களின் பெயரைச் சொல்லி அந்த ஆண்டவனின் பெயர் என்ன? என்றால் அதுவும் கதறகம தெவியோ. இது சிரிப்பான விடயம். "கதற கம" என்ற ஊரில் இருந்தபடியால் கதறகம தெவியோ என்ற பெயர் வந்தது. அதேபோன்றுமற்ற ஆலயங்களிலும் உள்ள ஆண்டவன் பெயர் கதறகம தெவியோவாக இருக்கமுடியாது. எனவே இவர்களது தெய்வத்திற்கு பெயர் இல்லை. இதிலிருந்து எமக்குத் தெரிவது எந்தக் கடவுள் அவர்களுடைய கடவுள் அல்ல என்பது.

—எஸ். நாதன்

# பிரதமரின் உறுதியின் பெறுமதி

"ஜே. ஆர். மிகவும் நல்லவர்; தெளிந்த ஞானமும் தீவிர சிந்தனையும்கொண்ட ஜனநாயக அரசியல்வாதி; ஒரே இலங்கைஎன்றஅமைப்பின்கீழ தமிழரை வாழவைக்க வந்த அவதாரப் புருஷர்" என்றெல்லாம் சிலர் எம்மவரைக் குழப்பிவருகின்றனர். இவையெல்லாவற்றையும், அண்மையிலே தமிழீழ மண்ணில் நடைபெற்ற விழாவொன்றிலே பேசிய தமிழர் பெருந் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் எவ்வளவு தூரம் நம்பகரமானவை என்று எடுத்தியம்பினார்.

அண்மையிலே பாதிக்கப்பட்ட மக்களுக்காக தாம் நீலிக்கண்ணீர் வடித்த ஜே. ஆர். வெளிநாட்டுமக்களையும் ஏமாற்றவெண்ணிவானொலி, பத்திரிகைகள் என்பன மூலம் எத்தனையோ உதவிகளைச் செய்வதாகவும் உறுதியளித்த ஜே. ஆர். — பழைய பிடியிலேதான் உள்ளாரென்பதிலே எதுவித ஐயத்துக்குமிடமில்லை. அவரளித்த உறுதிகள்லே எது நிறைவேற்றப்பட்டது? நாளாந்தம் இதழ்களைப் பார்க்கவே நிலைமை தெரிந்திருக்குமே. அந்தவகையிலே அண்மையிலே நடந்த சம்பவமொன்று.

தமிழீழத்தைச் சேர்ந்த இரண்டுமாணவிகள் ஒக்டோபர் மாதத்தின் மூன்றாவது வாரத்திலே தமது கல்விக்கூடமான வித்தியாலங்கார வளாகத்தை அடைந்து அவ்வளாக விடுதியின் தலைவியிடம் தமக்குத் தங்குமிடவசதி கேட்டபோது அவர் "இதுஎன்ன அகதிகள்முகாம் என்ற நினைப்போ?" என்று கேட்டுமறுத்துவிட்டார்பின்னர். அம்மாணவிகள் வளாகத் தலைவருடன் தொடர்புகொண்டு விடுதித் தலைவி கூறியதைக் கூறியபோது அவரும் விடுதித்தலைவியுடன் இணைந்த நிலையிலே. விடுதியிலே இடமளிக்க மறுத்துவிட்டாராம். பின்னர் வளாகத் தமிழ்ச்சங்கத் தலைவர் எவ்வளவோ எடுத்தியம்பிய பின்னர், இம்மாதம் அதாவது ஒக்டோபர் மாதம் 31ம் திகதிவரை மட்டும் தங்குவதற்கு வசதிசெய்து கொடுக்கப்பட்டுள்ளதாம்.

● கல்குடா செய்திகள்

# அமைச்சரின் ஆட்களின் அதிகார ஆதிக்கம்

செங்கலடியில் பஸ் 'சேவை தேசியமயமாக்கப்பட்ட நாள் முதலாக இருந்து வந்த மூன்று பஸ் தரிப்பு இடங்கள்' திடீர் இடமாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இந்த இடமாற்றத்தால் பஸ் பிரயாணிகள் படும் கஸ்டத்தை இந்த இடமாற்றம் செய்தவர்கள் அறியவில்லைபோல் தெரிகிறது. இந்த இடமாற்றங்கள் ஏற்பட்ட இடங்களை உற்றுப் பார்க்கின்றநேரத்தில் இவை வெறும் அரசியல் காரணமேயன்றி வேறுஒன்றும் இல்லையென பொதுமக்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். புதிய பஸ் தரிப்பு இடங்களில் ஒன்று (அ)நீதி மந்திரியின் வீட்டின் முன்னால் ஒன்றும் அவருடைய மருமகனின் (சகோதரியின் மகன்) வீட்டின் முன்னால் ஒன்றும் மற்றது அவருடைய (மந்திரியின் ஒன்றை விட்ட சகோதரி)யின் வீட்டின் முன்னால் ஒன்றுமாக இடம் பெயர்ந்துள்ளது. பொதுமக்கள் பாவிக்கவேண்டியவற்றை மந்திரியின் குடும்பத்தினர் பாவிப்பதற்கு உத்தியோகஸ்தர்கள் செய்துகொடுத்துள்ளார்களோ என்று பொதுமக்கள் சந்தேகிக்கின்றனர். (இதில் மாற்றப்பட்ட பஸ் தரிப்பில் ஒன்று கற்குடா தொகுதி த. வி. கூ. வேட்பாளர் திரு. சி. சம்பந்தமூர்த்தியின் வீட்டிற்கு அருகாமையில் இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.)

### நீதி மந்திரிக்கு எத்தனை தனிப்பட்ட உதவியாளர்?

நீதி மந்திரிக்கு ஒரு அந்தரங்க காரியதரிசியும் ஒரு தனிப்பட்ட உதவியாளரும் அரசாங்கத்தின் உதவியுடன் நியமனம் பெற்றார்கள். ஆனால் தற்சமயம் தனிப்பட்ட உதவியாளர்கள் என மந்திரிக்கு நெருங்கியவர்கள் பலர் இப்பகுதி உத்தியோகஸ்தர்களுடன் தனிப்பட்ட உதவியாளர் என்ற போர்வையில் தொடர்பு கொண்டு காரியங்களை தங்கட்கு சாதமாக பயன்படுத்திவருவதாக ஒரு பேச்சு அடிபடுகிறது. ஒரு மந்திரிக்கு எத்தனை தனிப்பட்ட உதவியாளர்கள் கடமை செய்யலாம் என்பதை அறிய பொதுமக்கள் விரும்புகின்றார்கள்.

### அரசாங்க உத்தியோகஸ்தர் யூ. என். பி. காடையர்களால் தாக்கப்பட்டார்.

செங்கலடி நீர்பாசனகாரியாலயத்தில் கடமையாற்றும் திரு. இருதயராசா என்னும் லிகிதர் சனிக்கிழமை இரவு செங்கலடிச் சந்தியில் வைத்து யூ. என் பி; காடையர்களின் மிருகத்தனமான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு தலையில் காயம் ஏற்பட்டு மட்டக்களப்பு அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். இவர் தாக்கப்படுவதற்கு ஒய்வுபெற்ற வைத்திய அதிகாரி ஒருவரே காரணமாக இருந்தார் என்றும் இவர் யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பில்வேலை செய்யக் கூடாது என்ற இயக்கத்திற்கு தலைமை தாங்குவதாகவும் அறியப்படுகின்றது.

### உத்தியோகஸ்தர்கள் வேலை நீக்கம்

கற்குடாத் தொகுதியில் செங்கலடி நீர்பாசன இலாகாவில் கடந்த சில வருடங்களாக கடமையாற்றிவந்த தொழிலாளர் மேற்பார்வையாளர்கள் 15பேர் 1-11-77 தொடக்கம் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால்தான் நீக்கம் செய்யப்பட்டார்கள் என பொதுமக்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி; வன்னியர் நாடா? அந்நியர் நாடா?

தமிழ் ஈழம் காண வரலாற்றில் வீர காவியம் படைத்துக் கொண்டிருக்கும் எனதருமைச் சகோதரனே!

சிங்கள வெறியர்களின் வெறியாட்டங்களுக்கு ஈடு கொடுத்து நிற்கும் வீரத் தமிழ் இளைஞனே இதோ! உனது எல்லைத் திருநாடாம் வன்னி மாநகர் வெறியர்களின் கைவரிசைக்கு இலக்காகி ஆட்டம் காணுகின்றது.

பண்டாரவன்னியனின் சந்ததி அடங்காத் தமிழர் பரம்பரை வாழ்ந்த அந்த எழில் கொஞ்சும் வன்னி மாநகரே?

ஆம்; அதேதான் அடங்காத் தமிழரின் தாய்த் திருநாடு. ஆனால் இன்று எழில் கொஞ்சும் வன்னி மாநகரல்ல, பேயாடும் பிணக்காடு!

சகோதரனே! இது நடப்பது சிங்கள நாட்டில் அல்ல. உன் பரம்பரையினர் ஆண்டு வந்த தமிழ் நாட்டில்

இது பொலிசாரினதும், இராணுவத்தினதும் இன வெறியால் ஏற்பட்ட கலவரம்.

அகதிகளுக்கு உணவளித்து உடை அளித்து பேணிய தமிழ் வியாபாரிகளின் கடைகள் மறுநாள் சாம்பல் பிணக்காடாகிக் காட்சியழித்தன.

ஏன்; பக்கத்திலிருந்த அத்தனை கடைகளையும் விடுத்து அகதிகளைப் பேணியவர்களின் கடைகள் மாத்திரம் அழிக்கப்பட வேண்டும்?

இது தான் அகதிகளைப் பேணியதிற்கு அவர்களுக்குக் கிடைத்த பரிசு.

இது நடந்தது சிங்கள நாட்டிலல்ல. உன் நாட்டில்! தமிழ் நாட்டில்! எழில் கொஞ்சும் வன்னி மாநகரில்!

அன்றிரவே வேறு வன்செயல்களும் ஆங்காங்கே தலைதூக்கின தமிழ் மக்களின் வீடுகள் உடைக்கப்பட்டன. உடமைகள் பறிக்கப்பட்டன முடிவில் வீடுகளும் எரிக்கப்பட்டன.

பல ஆண்டுகளாக அவன் இரத்தம் சிந்தி உழைத்த அவனது உடமைகள்...? எதிர்காலம் அவனின் முன் கேள்விக்குறி! ஓடுகிறான். எங்கே? அவனுக்கே தெரியவில்லை இது சிங்கள நாட்டிலல்ல சகோதரனே! உன் நாட்டில்.

வன்னித் தமிழ் விவசாயி இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கடும் காட்டுப் பனியிலும் சுட்டெரிக்கும் வெயிலிலும் பாடுபட்டு உழைத்த அந்தச் செல்வங்கள்! தானிய மூட்டைகள் சிங்கள வெறியர்களால் கொண்டு செல்லப் பட்டுவிட்டன.

இராணுவ முகாம்களின் முன் இராணுவத்தினரால் மக்கள் அடித்து துன்புறுத்தப்பட்டனர். அதுமட்டுமல்ல! முல்லைத்தீவிலிருந்து அகதிகளாக வந்த சிங்கள வெறியர்கள் கூட விகாரையின் முன்னால் வீதியில் சென்று கொண்டிருந்த வன்னி வாழ் மக்களை அடித்து துன்புறுத்தலாயினர்.

இவர்கள் இவ்வளவு துணிவுடன் செயற்பட்டதற்கு காரணம், வன்னியில் பெரும் பதவிகளில் கொண்டு வந்து வைக்கப்பட்டவர்கள் சிங்களவர்கள்.

இருந்த சில தமிழ் அதிகாரிகளை கொலைசெய்ய முயற்சி செய்யலாயினர் பயமுறுத்தல் கடிதங்கள் அவர்களுக்கு சென்றன. அவர்கள் நாட்டை விட்டே வெளியேறினர்.

வன்னி மாநகரில் வீரத் தமிழன் சிங்களவரை சுட்டுக் கொன்றதற்கு ஒரு அப்பாவிக் குருக்களை கச்சேரியில் வைத்து இராணுவத்தினர் அடித்தனர். அக்குருக்களின் அலறல் வவுனியா நகரையே கலங்கவைத்தது.

கடை எரிப்பின்போது, வன்செயல்களின்போது தடுக்க முற்பட்ட தமிழ்ப் பொலிசாரின் ஆயுதங்கள் பறிக்கப்பட்டு அவர்கள் தாக்கப்பட்டனர். மறுநாள் அவர்களுக்கு தலைமை அலுவலகத்திலிருந்து இடமாற்றச் செய்தி வருகின்றது. கடைகளை எரித்து வன்செயல்களில் ஈடுபட்ட பொலிசாருக்கல்ல தடுக்க முற்பட்ட இவர்களுக்குத்தான் ஏன்? இவர்கள் தமிழர்கள்

தமது பறிபோன உடமைகளைக் காட்ட தமிழ்மக்கள் சென்றபொழுது உங்களுக்கு தமிழ்நாடா வேண்டும்? எனக் கேட்டு தாக்கப்பட்டனர்.

சமாதானமாக இருங்கள் என பெரியவர்கள் வற்புறுத்திய போது எங்களுக்குத் தமிழ் நாடு வேண்டாம் என அறிக்கை எப்பொழுது விடுவீர்களோ அன்றே சமாதானம் என்று கூறுகிறார்கள் சிங்கள வெறியர்கள்.

ஒரு தமிழ்க் கிராமத்திற்கு பெரிய பதவியா எனப் பெயரும் சூட்டியுள்ளனர். வன்னி மாநகர் வெகுவிரைவில் சிங்களவர் கையில்...

ஐயகோ! பாழும் தலைவிதியே இதற்கொரு முடிவில்லையா? உன் வன்செயல்களுக்குத் தீர்வில்லையா?

—ஒரு தமிழ் அடிமை

## அல்வாய் வடக்கு த. வி. கூ. பிரமுகர் திரு. சி. தங்கராசா காலமானார்

அல்வாய் வடக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி வளர்வதற்குத் தன்னுடைய உடல், பொருள் ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த ஒருவர் அமரர் தங்கராசா அவர்கள் "திருமகள் ஸ்ரோர்ஸ்' என்னும் பெயரில் ஒரு ஸ்தாபனத்தை நடாத்திய ஒரு வர்த்தகர்.

கடந்த பொதுத்தேர்தலில் திரு. துரைரத்தினம் அவர்களின் வெற்றிக்காகத் தீவிரமாக உழைத்த ஒருவர். தமிழபிமானமும் சேவை மனப்பான்மையும் கொண்ட ஒரு தியாகி.

கடந்த 3-11-77ல் திடீரென மாரடைப்பால் அகால மரணமானார். ஐந்து பிள்ளைகளையும் மனைவியையும், பொதுமக்களையும் தவிக்க விட்டு அமரரானார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு பருத்தித்துறை பா. உ. திரு. துரைரத்தினம் நேரிடையாகச் சென்று ஆறுதல் கூறினார்.

இறுதி ஊர்வலத்தில் த.வி. கூ., த.ம.பே. ஆகியவற்றைச் சேர்ந்த பல உறுப்பினர்களும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# பல்கலைக் கழக மாற்றங்களால் கல்வி பாதிப்பு

### தமிழ் தலைவர்கள் கவனமெடுக்க வேண்டுமென மாணவர்கள் கோருகிறார்கள்

1976ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. (உயர் தர)ப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய 1977ஆம் ஆண்டில் வித்தியோதய வளாகத்தில் "முகாமைக் கல்வியும் வணிகமும்" பீடத்திற்கு பதினான்கு மாணவர்கள் தமிழ் மொழி மூலம் கல்வி பயில்வதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டார்கள். இதில் தமிழ் மாணவர்கள் 8 பேரும் முஸ்லிம் மாணவர்கள் 6 பேருமாவர்.

இவர்கள் வித்தியோதய வளாக மாணவர்களாகப் பதிவுசெய்யப்பட்டதுடன் சென்றமாதம் 17ஆந் திகதி விரிவுரைகளும் ஆரம்பமாகுமென அவ்வளாகப் பதிவாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் திடீரென 8 தமிழ் மாணவர்களும் யாழ். வளாகத்திற்கும், 5 முஸ்லிம் மாணவர்களும் வித்தியாலங்கார வளாகத்திற்கும், பல்கலைக்கழக உபவேந்தரின் கட்டளைப்படி மாற்றப்பட்டுள்ளார்களென வித்தியோதய வளாகப் பதிவாளரால் தந்தி மூலமும் பின்னர் கடித மூலமும் அறிவிக்கப்பட்டது.

இம்மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட "முகாமைக் கல்வியும் வணிகமும்" பீடத்தை விடுத்து "மனிதப் பண்பியற்" பீடத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதனால் இவர்கள் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் பெற்ற மிகத் திறமைவாய்ந்த துறைக்குரிய உரிமையை இழந்து சாதாரணவொரு பட்டப் படிப்பை மேற்கொள்ள வேண்டிய தொருநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட அத்துறைக்கே தம்மைத் திரும்பவும் அனுமதிக்கும்படி பல்கலைக் கழக உபவேந்தரிடம் கேட்டுக்கொண்டபோதும் இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை. ஆனால் 3-11-77ல் வெளியான "வீரகேசரி" பத்திரிகையில் விரிவுரையாளர்கள் இன்மையே இம்மாற்றத்திற்கான காரணமெனப் சேனற்பதிவாளர் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். இது மிகவும் கேலிக்கிடமானவொரு நொண்டிச்சாட்டாகும். தெரிவு செய்யப்பட்ட பின்னர்தான் விரிவுரையாளர்கள் பற்றிய ஞாபகம் வந்ததா? மேலும் அவ்வளாகத்தில் தற்சமயம் அதே பீடத்தில் கல்வி பயின்றுவரும் 2ம் 3ம் இறுதி ஆண்டுத் தமிழ் மாணவர்கட்கு விரிவுரையாளர்கள் இருக்கும்போது 1ம் வருட மாணவர்கட்கு மட்டுமா விரிவுரையாளர்கள் பிரச்சினை ஏற்பட்டுள்ளது? எனவே விரிவுரையாளர்கள் இல்லையென்பது ஒருபோலிச் சாட்டாகும். சென்ற அரசின் தரப்படுத்தல் மத்தியிலும் அதாவது இம்மாணவர்கள் சராசரி 266 புள்ளிகள் பெற்றே (க. பொ. த. உயர் தரப்பரீட்சையில்) இப்பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்களெனக் கூறப்படுகிறது. இந்நிலையில் இவர்களை வேறொருதுறையில்கல்வியை மேற்கொள்ளுமாறுகேட்பது அநீதியானது. இதுவிடயமாகப் பிரதமரின் கவனத்திற்குஇம்மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். எதிர்க் கட்சித்தலைவருக்கும் விண்ணப்பத்தின் பிரதி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தரப்படுத்தலை நீக்கியதாகக் கூறும் இன்றைய அரசு இம்மாணவர்கள் விடயத்தில் மட்டும் அநீதியைக் கடைப்பிடிக்கலாமா? எனவே இவ்விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் உடனடியாகத் தலையிட்டு திரும்பவும் அவர்களைத் தெரிவு செய்யப்பட்ட அதே துறைக்கு அனுமதி கிடைக்க உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். காலம் கடந்துகொண்டிருப்பதால் இவ்விடயத்தில் உடனடிக் கவனம் எடுக்கவும் என மாணவர்கள் கேட்கிறார்கள்.

## கட்சி அமைப்பாளர்களுக்கு கல்தா

யாழ் மாவட்டத்தில் இதுவரைகாலமும் அமைப்பாளர்கள் என்ற பேரில் இயங்கிவந்த சிலருக்கு சீட்டுக் கிழிக்க ஐ. தே. க. தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை கட்சிக்காரியாலயத்தில் இது பற்றி ஆராயப்பட்டதாம். ஊழல் குற்றச்சாட்டுக்கள் லஞ்ச நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்கீனங்கள் போன்ற பல முறைப்பாடுகள் தலைமைப்பீடத்துக்குக் கிடைத்துள்ளதாம். சில அமைப்பாளர்கள் முன்னைய அரசாங்கம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுக்கு வழங்கிய அதிகாரத்தைப் போல தங்களுக்கும் அதிகாரத்தைத் தரும்படி கேட்டுத் திரிகிறார்களாம்.

முன்னைய அரசாங்கம் ஊழல் பேர்வழிகளால் சாகடிக்கபட்டதைப் போன்று இந்த அரசாங்கமும் கெட்ட பெயர் வாங்கி விடுமோ என்று ஐ. தே. க.வின் பிரதிநிதிகள் கருதுகிறார்கள்...

இதில் குடாநாட்டைச் சேர்ந்த அமைப்பாளர்கள் அனைவரையும் தற்காலிகமாக பதவியிலிருந்து விலத்தும் முடிவுமேற்கொள்ளப் பட்டிருப்பதாக நம்பகமாகத்தெரியவருகிறது.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றுகின்ற தமிழ்மக்கள் இந்த ஊழல் போர்வழிகள் வசம் சிக்கிவிடவேண்டாம் என எச்சரிக்கை செய்கிறோம். ஊழல், லஞ்சம், மோசடி என்ற உழைப்புகளுக்காக மட்டும் குடாநாட்டில் அமைப்பாளர்கள் வருவார்களேதவிர கட்சியை வளர்க்க ஒரு தமிழன் கூட முன்வரமாட்டான் என ஐ. தே. க. தலைமைப்பீடத்துக்கு அறிவுறுத்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்குமேல் கேள்வி கிலிகொண்டு அலறினர் அமைச்சர் ஹமீது!

## உங்கள் அரசை எப்படி நம்புவது?

## இனவாதம் பேசியவர் எப்படிப் பிரச்சினைகளை தீர்ப்பார்? பள்ளிவாசல் படுகொலைகளை மறந்துவிட்டீர்களா?

### 14-10-77ல் லண்டனில் ஈழவிடுதலை வீரர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்

ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் பங்கு பற்றி விட்டு இலங்கை திரும்பும் வழியில் லண்டனில் தங்கி ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்த திட்டமிட்டிருந்தார் வெளிநாட்டு மந்தி(ரி) ஏ. சீ. எஸ். ஹமீட். அம்மாநாடு 14-10-77 ம் நாள் வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு இலண்டனில் உள்ள இலங்கை தூசரகத்தில் நடைபெற்றது. மாநாடு 12 மணிக்கு நடைபெறும் என்பதனை லண்டனிலுள்ள ஈழவிடுதலை, மற்றைய விடுதலை வீரர்களும் இரகசியமாக அறிந்து விட்டனர், அமைச்சரோ அன்றி தூதரகமோ மாநாடு பற்றி பத்திரிகையாளர் தவிர்ந்த வேறு எவருக்கும் தெரிவிக்கவில்லை.

அமைச்சரேர, தூதரகரமோ சற்றும் எதிர்பாரத விதத்தில் பகல் 10-30 மணியளவில் ஈழவிடுதலை அங்கத்தினர்கள் உட்பட பல விடுதலை வீரர்கள் தமிழர் நடவடிக்கைகுழுத் தலைவர் திரு. எஸ். மகரசிங்கம் தலைமையில் தமது எதிர்ப்பை காட்டும் எண்ணத்துடன் சுலோக அட்டைகளுடன் தூதரகம் முன்னே நின்று கோஷம் எழுப்பி எதிர்ப்பை காட்டினுர்கள்.

அமைச்சர், இவ்வித எதிர்ப்பை லண்டனில்சகிக்க மாட்டார் எனக்கருதிய லண்டனில் உள்ள துணை இலங்கை தூதகர் திரு. குணசிங்க(ள)ம் விடுதலை வீரர்களிடம் "நான் மந்திரியை சந்திப்பதற்குவேண்டியஒழுங்குகளை செய்கின்றேன் எனவே உங்கள் எதிர்ப்பு சுலோகங்களை தூக்கி எறிந்து விட்டு வெளியில் மரியாதையாக நில்லுங்கள். நீங்கள் உங்கள் நாட்டு மந்திரியை சந்திப்பதற்கு பாக்கியசாலிகளாக இருக்கவேண்டும். அத்துடன் மந்திரிக்கு சுலோகம் பிடிப்பது என்றுல் அறவே பிடிக்காது. எனவே அவரின் கோபத்தினை கிளற வேண்டாம்." அதற்கு விடுதலை வீரர்கள் "மந்திரியுடன் எமக்கு பேச்சு இல்லை" பத்திரிகையாளர்களுக்கு எமது அவலநிலை பற்றி மந்திரி பச்சை பொய் கூறக் கூடாது. இலங்கையிலும் ஓர் சைப்பிரஸ் உண்டு. இலங்கையிலும் ஓர் அயர்லாந்து (Northern Irland — I.R A.) உண்டு, என்பதினை பத்திரிகையாளர்கள் அறிந்து கொள்ள வேண்டும். மந்திரிக்குஐ. நா. செல்லக்கூட அருகதை இல்லை. காரணம் ஐ. நா.வின் மனித உரிமைகள் முழுப்படியாக மீறப்படும் நாடு இலங்கை என்பதினை பத்திரிகையாளர் அறிய வேண்டும் என்று முகத்தில் அறை கொடுத்தது போல் பதில் கூறினுர்கள்.

---

சிறீலங்கா அரசாங்கத்தின் வெளிவிவகார அமைசச்ர் ஜனுப் ஏ, சி. எஸ். ஹமீது அவர்கள் லண்டன் சென்றிருந்தபோது லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னர் ஆர்ப்பாட்டங்கள் பற்றியும் அமைச்சரை திரு. மகரசிங்கம், திரு. கிருஷ்ணன். திரு. கமலநாதன் ஆகியோர் சந்தித்து பேட்டி கண்டது பற்றிய செய்தியையும் 13-11-77 சுதந்திரனில்வெளியிட்டிருந்தோம். அன்று நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்களை விளக்கமாகத் தருகிருர் எமது லண்டன் நிருபர்,

---

மாநாட்டுக்கு வந்த பத்திரிகையாளர்களுக்கு எமது அவல நிலைபற்றி ஆங்கிலத்தில் பிரசுரங்களை விடுதலை வீரர்கள் கொடுத்தனர். கொடுக்கப்பட்ட பிரசுரங்களில் இருந்த விடயங்கள் பற்றி பல கேள்விகளை கேட்டு துளைத்தெடுத்தனர் பத்திரிகையாளர்கள், மந்தி(ரி) பதில் அளிக்க முடியாமல் திணறினுர். பின்னர் பத்திரிகையாளர்களிடம் தப்புவதற்கு என்று விடுதலை வீரர்களை அழைத்து பேசப் போவதாக கூறினுர். மாநாடு முடிந்து வெளியில் வந்த பத்திரிகையாளர்கள் விடுதலை வீரர்களில் மூவரை மந்திரி சந்திக்க விரும்புகிருர் என்றும் எனவே விடுதலை வீரர்கள் மந்திரியை சந்திக்க வேண்டும் என வற்புறுத்தி கூறியதற்கு இணங்க மந்திரியை சந்திக்க திரு. எஸ். மகரசிங்கம் (தலைவர் தமிழர் நடவடிக்கை குழு) திரு. எஸ். எஸ். கிருஷ்ணன் (செயலாளர் திரு. க. கமலநாதன்: ஆகியோர் சென்றனர்.

மேற்படி மூவரையும் வாசல்வரைக்கும் வந்து வரவேற்ற மந்திரி, நடுங்கிய வண்ணம் இருந்தார். மந்திரி மூவரிடமும் உங்கள் குறைகளை நிச்சயம் அரசு தீர்க்கும் என்றுர். அத்துடன் தரப்படுத்தலையும் அரசு எடுத்து விட்ட்து என்றுர்.

அதற்கு இளைஞர் பிரதிநிதிகள் பதிலளித்துப் பேசுகையில் "தரப்படுத்தல் எடுத்தாலும் எப்படி இனி தமிழர்கள்சிங்களப் பகுதிகளில் உள்ள பல்கலைகழகங்களில் படிக்கமுடியும்? எமது சகோதரிகளை எப்படி உங்கள் பகுதிகளில் படிக்க விடமுடியும்? சிங்கள மக்கள் மட்டுமல்ல உங்கள் அரசில் உள்ள பொலீஸ் கூட எமக்கு எதிரானவர்கள். ஆவணி இனக்கலவரத்தில் அவர்களின் போக்கினை நன்கு அறிந்துவிட்டோம்" என்றுர் திரு. கமலநாதன்;

யாழ்நகரில் எதிர்க்கட்சி தலைவர் உட்பட மக்களை தாக்கிய பொலீசார் மீது ஏன் உங்கள் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? பிரதமர் தேசிய அரசு பேரவையில் "போர் என்றுல் போர் சமாதானம் என்றுல் சமாதானம்" என்று இனவாதம் கக்கியுள்ளார். இப்படி பேசியவர் எப்படி எமது பிரச்சினையை தீர்த்து வைப்பார்? பிரச்சினையைத் தொடங்கியது நீங்கள்தான் ஆனுல் பிரச்சினையை தனிநாடு பெறுவதன் மூலம் தீர்த்து வைக்கப் போவது நாங்கள் தான் என்றுர் திரு. என். எஸ். கிருஷ்ணன்.

"நீங்களும் சிறுபான்மை என்பதினை மறந்துவிடவேண்டாம். முதலில் தமிழர்களுக்கு அடி, அடுத்த அடி தமிழ் பேசும் இஸ்லாமிய சகோதரர்களுக்கு. 1976 மாசிமாதம் புத்தளம் பள்ளிவாசல்படுகொலையை மறக்க வேண்டாம். உங்களுக்கு முதல் அடி 1915ம் ஆண்டு விழுந்தது என்றுர் திரு. மகரசிங்கம்.

மூவரும் மேற்கண்ட கேள்விகள் உட்பட பல கேள்விகள் கேள்விகளை கேட்டவுடன் கோபம் அடைந்த மந்திரி "உங்களுடன்எனக்கு பேச்சில்லை" எனக்கூறி வெளியில் சென்றுவிட்டார். அப்பொழுது மூவரும் "நாங்கள் பேச்சு நடத்த வரவில்லை. நீங்கள்தான் கட்டாயப் படுத்தி அழைத்தது எங்களை. எனவே ஏன் பதில் தராமல் பயந்து போகிறீர்கள்? தனிநாடு பெறுவோம் தமிழ் வாழ்க" எனக்பலத்த கோஷமிட்ட பின்னர் மூவரும் வெற்றிக்களிப்பில் வெளியில் வந்தனர்.

---

## அமரர் திருச்செல்வம் அஞ்சலிக் கூட்டம்

22-11-77 செவ்வாய்க்கிழமை அமரர் திருச்செல்வத்தின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில்மாபெரும் அஞ்சலிக்கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பா. உ.களும் பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

---

## த. வி. கூட்டணி பா.உ.களின் அமைச்சுப் பொறுப்புக்கள்

பல்லேறு அமைச்சுக்களினதும் கீழ் வரும் அலுவல்களை தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதென த.வி.கூ. நாடாளுமன்றக் குழு மேற்கொண்ட தீர்மானத்திற்கமைய ஒதுக்கப்பட்ட பொறுப்புக்களின் விபரத்தின்படி

திரு. அ. அமிர்தலிங்கம்—பிரதம அமைச்சர், பாதுகாப்பு,

திரு. மு. சிவசிதம்பரம்—நீதி, வர்த்தகம்.

திரு.செள. தொண்டமான்—தோட்டக்கைத்தொழில்;

திரு. வி. என். நவரத்தினம் — புடவைக் கைத்தொழில், கல்வி.

திரு. செ. இராசதுரை—சமூக சேவைகள், தகவல், ஒலிபரப்பு.

திரு. வி. தருமலிங்கம்—வெளி விவகாரம், உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மானம்.

திரு.சி. கதிரவேலுப்பிள்ளை—போக்குவரத்து

திரு. த. துரைரத்தினம்—விவசாயம், மீன்பிடி

திரு. தா. சிவசிதம்பரம்—நீர்ப்பாசனம், மின்சக்தி நெடுஞ்சாலைகள்.

திரு. வீ. ஆனந்தசங்கரி—உணவு, கூட்டுறவு.

திரு.கா. பொ. இரத்தினம்—கலாச்சார அலுவல்கள், (உத்தியோக மொழி விவகாரம்),

திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு — பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள். திட்டமிடல் பொருளாதார அலுவல்கள், திட்டச் செயற்படுத்தல்;

திரு. பூ. கணேசலிங்கம்—காணி.

திரு. இரா. சம்பந்தன்—கப்பல் போக்குவரத்து.விமானப் போக்குவரத்து, சுற்றுப் பயணம்.

திரு. பி.எஸ். சூசைதாசன்—நிதி, தொழில்.

திரு. த. இராசலிங்கம்—கல்வி, (பனம்பொருள்)

திரு. தா. திருநாவுக்கரசு—கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள்.

திரு. வெ. யோகேஸ்வரன்—சுகாதாரம், விளையாட்டுத் துறை, பாராளுமன்ற அலுவல்கள்,

திரு. கனகரத்தினம்—அஞ்சல், தொலைத் தொடர்புகள் ஆகியவை பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன.

---


## தேவை

நல்ல நிலையில் உள்ள றலி பைசிக்கில் தேவை. விற்பனைக்குள்ளவர்கள் கீழ் கண்ட முகவரிக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,
சுதந்திரன்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்



## "மில்க்வைற் செய்தி — இதழ்23" பொன்விழா சிறப்பு மலர்

மில்க்வைற் நீல சோப் மேலுறைகள் 100 அல்லது 25 மில்க்வைற் பார் சோப்; அல்லது 25 நீம் வாசனை சோப் அல்லது 25 மெடிக் கேட்டட் சோப் அல்லது 25மில்க்வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி சிறப்பு மலரை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப் பகுதி:
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்க வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org